இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 78 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஐப்பசி 11 – புதன்கிழமை 28 அக்டோபர் 2026 – மதுரை 10 பக்கங்கள் Established:10.8.1942 - Volume:85 - Issue 78: Thiruvalluvar Year - 2057 - Ippasi 11 - Wednesday 28 October 2026 - Madurai 10 Pages ₹ 5.00

Breaking Bad-ஐ தொடர்ந்து Prison Break-ம் தொடங்கிவிட்டது!

சிறையிலிருந்து கைதிகளை தப்பிக்கவிடும் அவலத்தில் த.வெ.க. ஆட்சி!

தேனி மாவட்டத்தில் சிறையிலிருந்து கைதிகள் தப்பியோட்டம்: கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் விமர்சனம்!

சென்னை, அக். 28 -

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகே தேக்கம்பட்டியிலுள்ள மாவட்ட சிறையில், சிறைக் காவலர்களைத் தாக்கிவிட்டு பதினேழு கைதிகள் தப்பிச் சென்றது குறித்து, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில், "சிறைக்குள் இருக்கும் கைதிகளை தப்பிக்க விடும் அவலட்சணத்தில் த.வெ.க. அரசு உள்ளது" என்று கடுமையாக விமர்சித்துள்ளார்.



தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகே தேக்கம்பட்டியில் உள்ள மாவட்ட சிறையில், சிறைக் காவலர்களைத் தாக்கிவிட்டு 17 கைதிகள் தப்பியோடினர். இந்தச் சிறையில் ஒரே அறையில் 17 கைதிகள் அடைக்கப் பட்டிருந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் (அக்டோபர் 26) இரவு, அந்த அறையில் இருந்த கைதி ஒருவருக்கு திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டதாகச் சிறைக் காவலர்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து சிறைக் காவலர்கள் அறையின் கதவைத் திறந்து உள்ளே சென்றுள்ளனர். அப்போது அங்கு மறைந்திருந்த கைதிகள், காவலர்களைத் திடீரெனத் தாக்கிவிட்டு சிறையிலிருந்து தப்பியோடியுள்ளனர்.

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

Breaking Bad தொடர்ந்து, தமிழ்நாட்டில் Prison Break-ம் தொடங்கிவிட்டது!

ஜாமினில் வெளிவரும் குற்ற வாளிகளைத்தான் கண்காணிப்ப தில்லை என்று நினைத்தேன்.

சிறைக்குள் இருக்கும் கைதி களையும் தப்பிக்க விடும் இலட்சணத்தில்தான் இந்த ஆட்சி இருக்கிறது.

2026-இல் இப்படி நடப்பதை ஏற்க முடியாது!

புழல் சிறையில் இருந்து 2 கைதிகள் தப்பி ஓடிய அதிர்ச்சியில் இருந்து நாம் மீள்வதற்குள், தேனி மாவட்டச் சிறையில் இருந்து 17 கைதிகள் தப்பியுள்ளனர்.

ஒரேயடியாக இத்தனை கைதிகள் தப்பிப்பது 1995க்குப் பிறகு இதுதான் முதல்முறை என்கிறார்கள். பாதுகாப்பு ஏற்பாடுகளும், கண்காணிப்பு வசதிகளும் மேம்பட்ட 2026இல் இப்படி நடப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

வெளியில் இருக்கும் குற்ற வாளிகள் சுதந்திரமாகக் குற்றங் களைப் புரிகிறார்கள். உள்ளே இருக்கும் கைதிகளும் தைரியமா கத் தப்பிச் செல்கிறார்கள்.



ஒன்றுக்கும் உதவாத மூடர்கூட அரசு!

மொத்தத்தில், ஒன்றுக்கும் உதவாத good for nothing அரசாக இந்த மூடர்கூடத் த.வெ.க. அரசு இருக்கிறது. இவர்கள் மக்களைக் காக்கப் போவதில்லை. மக்களே அவர் களைக் காத்துக் கொள்ள வேண்டிய அவல நிலைக்குத் தமிழ்நாடு சென்றுவிட்டது.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

மக்களுக்கு அதிர்ச்சி கொடுத்த ஆவின்! பண்டிகைக் காலத்தில்

நெய், வெண்ணெய், இனிப்புப் பொருட்களின் விலை கடும் உயர்வு!

குடும்ப பட்ஜெட்டைச் சமாளிக்க முடியாமல் ஏழை, எளிய மக்கள் திணறல்!

சென்னை, அக்.27-

தமிழகத்தில் பொது மக்களின் அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றான ஆவின் நிறுவனம், பால் மட்டுமின்றி பல்வேறு வகையான பால் உப பொருட்களையும் தயாரித்து வழங்கி வருகிறது.

இந்நிலையில், எதிர்வரும் பண்டிகைக் காலத்தைக் கருத்தில் கொண்டு, பொதுமக்கள் அதிகமாக வாங்கிப் பயன்படுத்தும் நெய், வெண்ணெய், தயிர், மோர் மற்றும் பல்வேறு வகையான இனிப்புப் பொருட்களின் விலையை அதிரடியாக உயர்த்தி ஆவின் நிர்வாகம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது. ஏற்கனவே பல்வேறு நுகர்வோர் பொருட்கள் மற்றும் மளிகைப் பொருட்களின் விலை உயர்வால் அவதிப்பட்டு வரும் பொது மக்களுக்கு, முன்னணிப் பொதுத்துறை நிறுவனமான ஆவினின் இந்த திடீர் விலை உயர்வு அறிவிப்பு பெரிய சுமையாக மாறியுள்ளது.

எந்தெந்தப் பொருட்களின் விலை எவ்வளவு உயர்வு?

ஆவின் நிறுவனம் சார்பில் தயாரிக்கப்பட்டு விற்கப்படும் 230க்கும் மேற்பட்ட பால் உப பொருட்களில், தற்போது சுமார் 67 பொருட்களின் விலைகள் உயர்த்தப்பட்டுள்ளன. அதன்படி, 100 கிராம் ஆவின் நெய் பாட்டில் விலை 10 ரூபாய் உயர்ந்து 95 ரூபாயாகவும், ஒரு லிட்டர் ஆவின் நெய் விலை 80 ரூபாய் உயர்ந்து 770 ரூபாயாகவும், அரை லிட்டர் நெய் விலை 30 ரூபாய் உயர்ந்து 390 ரூபாயாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும், அரை கிலோ ஆவின் வெண்ணெய் விலை 45 ரூபாய் உயர்ந்து 320 ரூபாயாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

இது தவிர, பண்டிகைக் காலங்களில் மக்கள் அதிகம் விரும்பி வாங்கும் பால்கோவா, மைசூர்பாக், ரசகுல்லா மற்றும் குலோப் ஜாமுன் போன்ற இனிப்பு வகைகளின் விலைகளும் கணிசமாக உயர்த்தப் பட்டுள்ளன.

தயிர், மோர், மில்க் ஷேக் விலைகளும் உயர்வு:

வெறும் நெய் மற்றும் இனிப்புகள் மட்டுமல்லாமல், அன்றாடம் பயன்படுத்தப்படும் தயிர், மோர் மற்றும் குளிர்பான வகைகளின் விலைகளும் உயர்த்தப் பட்டுள்ளன. 50 கிராம் பிரீமியம் கப் தயிர் 5 ரூபாயிலிருந்து 7 ரூபாயாகவும், ஒரு கிலோ தயிர் 120 ரூபாயிலிருந்து 130 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

அதேபோல், 200 மி.லி. மோர் விலை 8 ரூபாயிலிருந்து 10 ரூபாயாகவும், பாட்டில் மோர் 12 ரூபாயிலிருந்து 14 ரூபாயாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும், குழந்தைகளை ஈர்க்கும் 200 மி.லி. அளவிலான 10 வகையான மில்க் ஷேக்குகளின் விலையும் 30 ரூபாயிலிருந்து 35 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளதுடன், நெய்ப் பாக்கெட்டுகள் மற்றும் பிற உப பொருட்களின் விலைகளும் மாற்றிய மைக்கப்பட்டுள்ளன.

இன்று முதல் அமலுக்கு வரும் விலை உயர்வு:

புதிதாக அறிவிக்கப் பட்டுள்ள இந்த விலை உயர்வு இன்று முதல் தமிழகம் முழுவதும் முழுமையாக அமலுக்கு வரவுள்ளது. பண்டிகைக் காலத்தைக் குறிவைத்து அரசுத் துறை நிறுவனமான ஆவின் நிறுவனமே இதுபோன்ற அதிரடி விலை உயர்வை நடைமுறைப்படுத்தியுள்ளதால், நடுத்தர மற்றும் ஏழை, எளிய மக்கள் குடும்ப பட்ஜெட்டைச் சமாளிக்க முடியாமல் திணறி வருகின்றனர்.

நிர்வாகத் திறனற்ற 'டம்மி' முதல்வரின் ஆட்சியில்

5 மாதங்களில் 50 கைதிகள் தப்பியோட்டம்!

சென்னை, அக். 28 -

தமிழ்நாட்டில், த.வெ.க. ஆட்சிக்கு வந்த பின்னர் 5 மாதங்களில், பல்வேறு சிறைகள் மற்றும் சிறார் கூர்நோக்கு இல்லங்களிலிருந்து கைதிகள் தப்பியோடும் சம்பவங்கள் தொடர்ச்சியாக அரங்கேறியுள்ளன. இது வரை 50க்கும் மேற்பட்ட கைதிகள் தப்பியோடிய நிலையில், சிறைகளின் பாதுகாப்பு குறித்து கேள்வி எழுந்துள்ளது.

செங்கல்பட்டு சிறார் கூர்நோக்கு இல்லத்திலிருந்து, ஜூன் 21ம் தேதி, 5 பேர் தப்பியோடினர். ஜூலை 1ஆம் தேதி, தேனி பழனிசெட்டிபட்டி காவல் நிலையத்திலிருந்து கைதி ஒருவர் தப்பினார்.

ஜூலை 2ஆம் தேதி, பாளையங்கோட்டை சிறையிலிருந்து ஒரு கைதி தப்பியோடினார். தொடர்ந்து, ஜூலை 12ஆம் தேதி, செங்கல்பட்டு சிறார் கூர்நோக்கு இல்லத்திலிருந்து 12 பேர் தப்பினர்.

ஆகஸ்ட் 13 மற்றும் 14ஆம் தேதிகளில், அதே கூர்நோக்கு இல்லத்திலிருந்து மேலும் 11 பேர் தப்பியோடினர்.

அக்டோபர் 10ஆம் தேதி, கன்னியாகுமரி மாவட்டம் ஆசாரிப்பள்ளத்தில் போக்சோ வழக்கில் தொடர்புடைய கைதி தப்பியோடினார். அக்டோபர் 20 மற்றும் 21ஆம் தேதிகளில், சென்னை புழல் சிறையிலிருந்து தலா ஒரு கைதி என இருவர் தப்பினர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் தேனி சிறையிலிருந்து காவலர் களைத் தாக்கிவிட்டு 17 கைதிகள் தப்பியோடினர்.

அதனைத் தொடர்ந்து நேற்று நாமக்கல் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்காக அழைத்து வரப்பட்ட கைதி ஒருவரும் தப்பியோடியுள்ளார்.

தொடர்ச்சியாக அரங்கேறும் இந்தச் சம்பவங்கள், சிறை மற்றும் கைதிகள் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து கேள்வி எழுந்துள்ளது.

த.வெ.க. ஆட்சியில் அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிரடியாக உயர்வு!

பதவியேற்ற 5 மாதங்களுக்குள் இப்படியா? பொதுமக்கள் வேதனை!

சென்னை, அக். 28 -

த.வெ.க. அரசு தங்களின் சுமையை குறைக்காமல், தலையில் இடியை போடும் அளவிற்கு விலை வாசியை தொடர்ந்து உயர்த்தி வருவதாக பொதுமக்கள் வேதனை தெரிவித்துள்ளனர்.

த.வெ.க. அரசு பதவியேற்ற 5 மாதங்களுக்குள் அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலை விண்ணை முட்டும் அளவிற்கு உயர்ந்துள்ளது. அரிசி விலை கடுமையாக உயர்ந்துள்ளது. 25 கிலோ அரிசி மூட்டை ஒன்று த.வெ.க. ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் 900 ரூபாயாக இருந்தது. தற்போது மூட்டைக்கு ஆயிரத்து 100 ரூபாய் அதிகரித்து, 2 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

அரிசி மூட்டை ஒன்றுக்கு குறைந்தபட்சம் 600 ரூபாய் முதல் ஆயிரம் ரூபாய் வரை விலை உயர்ந்துள்ளதால் பொது மக்கள் கடும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர். பருப்பு விலையும் கிலோவுக்கு 20 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.

அரசு தங்களின் சுமையை குறைக்காமல் மாறாக தலையிலேயே இடியை போடும் அளவிற்கு விலையேற்றியுள்ளதாக மக்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.